දත්ත ආරක්ෂණ අධිකාරිය

தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை

Data Protection Authority

**First Floor, Block 5, BMICH, Bauddhaloka Mawatha, Colombo 07, Sri Lanka.**
**Tel: +94 (0)112697241, Email: info@dpa.gov.lk, Web: www.dpa.gov.lk**


**இலக்கம்: DPA/Legal/01/02** **திகதி: 2026 ஆகஸ்ட் 07**

**தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சுற்றறிக்கை: இலக்கம் 01/2026**

**அமைச்சுக்களின் செயலாளர்கள்,**
**அனைத்து ஆணைக்குழுக்களின் தலைவர்கள்,**
**மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்,**
**திணைக்களங்களின் தலைவர்கள்,**
**மாவட்டச் செயலாளர்கள்,**
**அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டரீதியான நிறுவனங்களின் தலைவர்கள்,**
**அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தலைவர்கள்.**

**2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம்**
**(2025 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டது)**
**பொதுத் துறையில் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (PDPA) பயன்பாடு**

## 1.0 பின்னணி

1.1 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவு பாதுகாப்புச் சட்டம் ("PDPA"), 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி இயற்றப்பட்டது. அதன் முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பரிவர்த்தனைகள் மற்றும் தொடர்பாடல்களில் ஈடுபடும் தரவுடன் தொடர்புபட்டவர்களின் தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகளை வழங்குவதுடன், டிஜிட்டல் பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்தை எளிதாக்குவதற்கான ஒழுங்குமுறைச் சட்டகத்தையும் இச்சட்டம் வழங்குகிறது.

1.2 இச்சட்டமானது "தனிப்பட்ட தரவின்" "செய்முறைப்படுத்தலை" ஒழுங்குபடுத்துகிறது. அதாவது, "தரவுடன் தொடர்புபட்டவர்" என அழைக்கப்படும் இயற்கையான நபரை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அடையாளம் காணக்கூடிய எந்தவொரு தகவலும் தனிப்பட்ட தரவு ஆகும். "செய்முறைப்படுத்தல்" என்ற பதமானது, தனிப்பட்ட தரவுகளைச் சேகரித்தல், சேமித்தல், பாதுகாத்தல், மீட்டெடுத்தல், கடத்துதல், அத்துடன் அழித்தல் அல்லது தனிப்பட்ட தரவுகளின் மீது தர்க்கரீதியான அல்லது கணிதரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பரந்தளவிலான செயற்பாடுகளை உள்ளடக்கும் வகையில் வரையறுக்கப்பட்டுள்ளது. இச்சட்டமானது, பொது அதிகார அமைப்புகள் மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் சேவைகளை வழங்கும்போது ஏற்படக்கூடிய எந்தவொரு பாதகமான தாக்கத்திலிருந்தும் "தரவுடன் தொடர்புபட்டவர்களின்" தகவல் சார்ந்த தனியுரிமையைப் பாதுகாக்கிறது. "தரவுடன் தொடர்புபட்டவர்" என்பதன் வரைவிலக்கணத்தின்படி, குடிமக்கள் மற்றும் குடிமக்கள் அல்லாதோர் ஆகிய இருதரப்பினரினதும் தனிப்பட்ட தரவுகள் PDPA இன் கீழ் சமமான முறையில் பாதுகாக்கப்படுகின்றன. ("தரவுடன் தொடர்புபட்டவர்களின்" உரிமைகள் சட்டத்தின் பாகம் II இல் குறிப்பிடப்பட்டுள்ளன.)

1.3 தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தை (PDPA) வலுப்படுத்துவதற்கும், அனைத்துத் துறைகளிலும் அதிகளவிலான தொழில்நுட்பத் தெரிவுகளுடன் அது முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும், 2025 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் (திருத்தச்) சட்டம் இயற்றப்பட்டது. பொது மற்றும் தனியார் துறைகள் "Cloud First" உத்தியைப் பின்பற்றுவதற்கான வாய்ப்பு; தரவுப் பாதுகாப்பு அலுவலரின் கடமைகளை வெளிவாரிச் சேவையாகப் பெறுவதற்கான வாய்ப்பு; அரசியலமைப்பின் கீழ் பாதுகாக்கப்படும் உரிமைகள், குறிப்பாக சமத்துவத்திற்கான உரிமை மற்றும் பாகுபாடின்மைக்கான உரிமை, தன்னியக்கமயமாக்கப்பட்ட தீர்மானங்களினால் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில், அத்தகைய தீர்மானங்களை மீளாய்வு செய்வதற்கான ஏற்பாடு; பாகம் 1, பாகம் 2, பாகம் 3 மற்றும் பாகம் 7 (தண்டங்கள்) ஆகியவற்றுடன், சட்டத்தின் பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை உள்ளடங்கலாக, PDPA நடைமுறைக்கு வரும் திகதிகளை கட்டங்கட்டமாக அறிவிப்பதற்கான ஏற்பாடு; ஆகியவை திருத்தச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சில முக்கிய அம்சங்களாகும். புதிய பிரிவு 51A, பிரிவு 12(2)-ன் கீழ் வழிகாட்டுதல்களை வெளியிடுவதற்கும், துறைவாரியான வழிகாட்டுதல்களை

வெளியிடுவதற்கும், அத்துடன் தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைக் கோரிக்கைக்கு பதிலளிக்க வேண்டிய தெளிவான காலக்கெடுக்களை சர்வதேச தரநிலைகளுக்கு அமைவாக நிர்ணயிப்பதற்கும் DPA-க்கு அதிகாரம் அளிக்கிறது. தரவுடன் தொடர்புபட்டவர்களின் உரிமைக் கோரிக்கைகளுக்கு எவ்விதக் கட்டணமும் அறவிடப்படக் கூடாது. எனினும், விதிகளின் மூலம் குறிப்பிடப்படும் அளவுகோல்களுக்கு அமைவாக, விதிவிலக்கான சூழ்நிலைகளில் கட்டணம் அறவிடப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

1.4 தரவுடன் தொடர்புபட்டவர்களின் தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்கும், PDPA-ஆல் ஒழுங்குபடுத்தப்படும் நிறுவனங்கள் “கட்டுப்பாட்டாளர்கள்” மற்றும் “செய்முறைப்படுத்துநர்கள்” ஆகும். தனிப்பட்ட தரவுகளைச் செய்முறைப்படுத்துவதற்கான நோக்கங்கள் மற்றும் வழிமுறைகளை முதன்மையாகத் தீர்மானிக்கும் தரப்புகளாக உள்ள “கட்டுப்பாட்டாளர்கள்” மீது, சட்டத்தின் பகுதி I இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செய்முறைப்படுத்தல் தொடர்பான கடமைகளுக்கு இணங்குதல் உள்ளடங்கலாக, பல்வேறு சட்டப்பூர்வக் கடமைகள் விதிக்கப்பட்டுள்ளன. “செய்முறைப்படுத்துநர்கள்” என்பவர்கள், ஒரு கட்டுப்பாட்டாளரின் சார்பாக சில தனிப்பட்ட தரவு செயலாக்கப் பணிகளை மேற்கொள்வதற்காக, கட்டுப்பாட்டாளரால் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஈடுபடுத்தப்படுபவர்கள் ஆவர். “கட்டுப்பாட்டாளர்” என்ற வரைவிலக்கம், ஒரு பொது அதிகாரசபை, அரச கூட்டுத்தாபனம், அல்லது தனியாகவோ அல்லது ஏனையவர்களுடன் கூட்டாகவோ தனிப்பட்ட தரவுகளைச் செய்முறைப்படுத்துவதற்கான நோக்கம் மற்றும் வழிமுறைகளைத் தீர்மானிக்கும் எந்தவொரு இயற்கையான தனிநபர் அல்லது சட்டரீதியான நபரையும் உள்ளடக்குகிறது. (PDPA-இல் உள்ள “செய்முறைப்படுத்துநர்” என்பதன் வரைவிலக்கணத்தைப் பார்க்கவும்; அதற்கான விளக்கம் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

1.5 PDPA ஆனது, தனிப்பட்ட தரவுகளின் செய்முறைப்படுத்தல் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இலங்கைக்குள் இடம்பெறும் போது அல்லது இலங்கையில் உள்ள ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் போது, பிராந்திய ரீதியாகவும், இலங்கைக்கு வெளியிலுள்ள ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்தினால் இலங்கையில் உள்ள தரவுடன் தொடர்புபட்டவர்களுக்கு பொருட்கள் அல்லது சேவைகள் வழங்கப்படும் போது அல்லது அவர்களின் நடத்தைகள் இலங்கைக்குள் கண்காணிக்கப்படும் போது, பிராந்திய எல்லைக்கு அப்பாற்பட்ட வகையிலும் பொருந்தும்.

1.6 PDPA-இன் பிரிவு 3(1)-ன்படி, தரவுடன் தொடர்புபட்டவர்களின் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு தொடர்பாக, வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் இதற்கு முரணாக எதுவும் இருப்பினும், PDPA அமுல்படுத்தப்படும். எனினும், ஒரு பொது அதிகாரசபை வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தால் நிர்வகிக்கப்படும் நிலையில், தரவுடன் தொடர்புபட்டவர்களின் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு இந்தச் சட்டத்துடன் ஒத்துப்போகும் வகையில், அத்தகைய எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தனிப்பட்ட தரவுகளைச் செய்முறைப்படுத்துவது அத்தகைய அதிகாரசபைக்கு சட்டபூர்வமானதாகும். எவ்வாறாயினும், ஏதேனும் முரண்பாடு ஏற்படும் பட்சத்தில், ஏனைய எழுத்திலான சட்டங்களுக்கு மேலாக PDPA மேலோங்கும்.

**2.0 சட்டத்தை கட்டங்கட்டமாக அமுல்படுத்துதல்**

2.1 PDPA மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினால் அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் தொழில்நுட்ப அமைச்சரால் வெளியிடப்பட்ட கட்டளையொன்றின் மூலம் (2023 ஜூலை 21 ஆம் திகதியிட்ட 2341/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்), சட்டத்தின் பாகம் V (தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை) இன் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் திகதியாக 2023 ஜூலை 17 ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டது. 2023 ஆகஸ்ட் மாதத்தில் “தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையின்” தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையை நியமிப்பதற்கு ஏதுவாக இது மேற்கொள்ளப்பட்டது.

2.2 PDPA-ஐத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதையடுத்து, முதலில் 2025 மார்ச் 18 ஆம் திகதிக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த அமுலாக்கத் திகதி, 2024 ஜனவரி 8 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 2366/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி, உரிய முறையில் திருத்தப்பட்டுள்ளது. PDPA 2025 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க திருத்தச் சட்டம், ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் திகதிகளை நிர்ணயிக்கும் பொருந்தக்கூடிய விதிகளை தற்போது திருத்தியுள்ளதுடன், அதன் வெவ்வேறு பிரிவுகளையும் பாகங்களையும் கட்டங்கட்டமாக நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கும் வழிவகுத்துள்ளது. எனவே, பொது அதிகாரசபைகள் புதிய அமுலாக்கத் திகதிகளை கவனத்தில் கொள்ள வேண்டும்; அவை விரைவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
(குறிப்பு: தொடர்புடைய நிர்வாக ஏற்பாடுகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரே, தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை முறைப்பாடுகளை விசாரணை செய்தல், மேன்முறையீடுகளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.)

**3.0 தரவுப் பாதுகாப்பு அலுவலர் (DPO)**

3.1 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின், 2025 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட, பாகம் III இன் கீழ், தரவுப் பாதுகாப்பு அலுவலர் ("DPO") ஒருவரை நியமித்தல் ஒரு முக்கியமான நிர்வாகத் தேவையாகும். சட்டத்தின் பிரிவு 20 இன் அடிப்படையில், தனிப்பட்ட தரவுகளைச் செய்முறைப்படுத்தும் ஒவ்வொரு அமைச்சும் அல்லது அரசாங்கத் திணைக்களமும், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்காக, ஒரு DPO-வை நியமிக்க வேண்டும்.

3.2 அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்கள், பிரிவு 20(1)(a)-ன் கீழ் DPO ஒருவரை நியமிப்பதற்கான அளவுகோல்களில் உள்ளடக்கப்படாவிட்டாலும், சட்டத்தின் பிரிவு 20(1)(b)-ன் கீழும், அப்பிரிவின் கீழ் உருவாக்கப்படும் விதிகளால் பரிந்துரைக்கப்படும் அளவுகோல்களின் அடிப்படையிலும், DPO ஒருவரை நியமிப்பதற்கான கடப்பாடு ஏற்படக்கூடும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, அத்தகைய நிறுவனங்கள் தமது செய்முறைப்படுத்தல் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்து, சட்டத்தின் கீழ் DPO ஒருவரை நியமிப்பது அவசியமா என்பதைத் தீர்மானிக்க ஊக்குவிக்கப்படுகின்றன. மேலும், PDPA திருத்தச் சட்டத்தின் கீழ் உள்ள "தரவுப் பாதுகாப்பு அலுவலர்" என்பதன் வரைவிலக்கணத்தையும் கவனத்தில் கொள்ளவும்.

3.3 DPO, சட்டத்தின் பிரிவு 20(5)-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பானவராவார். அவற்றுள், PDPA-இன் கீழான இணக்கப்பாட்டுக் கடப்பாடுகள் தொடர்பில் கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநருக்கு ஆலோசனை வழங்குதல், பொருந்தக்கூடிய சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு தாக்க மதிப்பீடுகள் தொடர்பில் ஆலோசனை வழங்குதல், தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையுடனான தொடர்புக்கான ஒரு ஒருங்கிணைப்புப் புள்ளியாகச் செயற்படுதல், மற்றும் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் நிறுவனத்திற்குள் விழிப்புணர்வையும் பயிற்சியையும் மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

3.4 DPO ஒருவரை நியமிக்க வேண்டிய ஒவ்வொரு அமைச்சும் அல்லது அரசாங்கத் திணைக்களமும் மற்றும் ஏனைய அரசாங்க அலுவலகங்களும், அவ்வாறு நியமிக்கப்பட்ட DPO-வின் தொடர்பு விபரங்களை அதன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படுவதையும், தரவுடன் தொடர்புபட்டவர்கள் அவற்றை இலகுவாக அடையக்கூடிய வகையில் இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். நியமிக்கப்பட்ட DPO-வின் பெயர் மற்றும் தொடர்பு விபரங்கள், தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையினால் அவ்வப்போது குறிப்பிடப்படும் முறையில், தரவுப் பாதுகாப்பு அதிகாரசபைக்கும் அறிவிக்கப்பட வேண்டும்.

3.5 பொதுத்துறை நிறுவனங்கள், DPO-விற்கு சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்கும், நிறுவனத்திற்குள் பயனுள்ள "தரவுப் பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை" நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான வளங்கள், அதிகாரம் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான அணுகல் வசதிகளையும் ஆதரவையும் உறுதிப்படுத்துமாறு ஊக்குவிக்கப்படுகின்றன.

**4.0 பொது அதிகாரசபைகள் மீது PDPA ஏற்படுத்தும் தாக்கங்கள்**

4.1 பல பொதுத்துறை நிறுவனங்கள், தமது சேவைகளுடன் தொடர்புபட்ட தனிப்பட்ட தரவுகளுக்கும், தமது பணியாளர்களின் தனிப்பட்ட தரவுகளைச் செய்முறைப்படுத்துவதற்கும் "கட்டுப்பாட்டாளர்களாக" செயற்படுவதால், PDPA-இன் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான பொருத்தமான தொழில்நுட்ப மற்றும் நிறுவன ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
2025 ஆம் ஆண்டின் PDPA திருத்தத்தின்படி, "பொது அதிகாரசபை" என்பது ஒரு அமைச்சு, ஏதேனும் திணைக்களம் அல்லது மாகாண சபை, உள்ளூராட்சி அதிகாரசபை அல்லது ஒரு மாகாண சபையின் அமைச்சு அல்லது திணைக்களம் என்பவற்றைக் குறிக்கும்.

4.2 'கட்டுப்பாட்டாளர்' என்ற வகையில் செயற்படும் அனைத்து பொது அதிகாரசபைகளும், தனிப்பட்ட தரவுகள் PDPA-இன் பாகம் I இன் கீழான செய்முறைப்படுத்தல் தொடர்பான கடப்பாடுகளுக்கு அமைவாகச் சேகரிக்கப்பட்டு செய்முறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.அத்தகைய பொது அதிகாரசபைகள் சட்டபூர்வத்தன்மை (பிரிவு 5), நோக்கத்தைக் குறிப்பிடுதல் (பிரிவு 6), நோக்கத்தை வரையறுத்தல் (பிரிவு 7), துல்லியத்தைப் பேணுதல் (பிரிவு 8), தக்கவைப்புக் கால வரையறை (பிரிவு 9), ஒருமைப்பாடு மற்றும் இரகசியத்தன்மை தொடர்பான கடப்பாடுகள் (பிரிவு 10), மற்றும் வெளிப்படைத்தன்மை (பிரிவு 11) தொடர்பான கடப்பாடுகளுக்கு இணங்க வேண்டும்.

4.3 பொது அதிகாரசபைகள், பாகம் I இன் கீழான மேற்குறிப்பிட்ட கடப்பாடுகளுக்கு இணங்குவதற்கான பொறுப்புக்கூறலை, பிரிவு 12-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு "தரவுப் பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்" மூலம் உறுதிப்படுத்த வேண்டும். இதில், PDPA-இன் பாகம் II இன் கீழ் தரவுடன் தொடர்புபட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வசதியளித்தலும் உள்ளடங்கும்.

4.4 பாகம் III இன் கீழ் விதிக்கப்பட்டுள்ள மேலதிக கடப்பாடுகளான, பொருத்தமான “தரவுப் பாதுகாப்பு அலுவலர்” ஒருவரை நியமித்தல் (பிரிவு 20) மற்றும் தேவைப்படும் சந்தர்ப்பங்களில், சில தனிப்பட்ட தரவுச் செய்முறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான தரவுப் பாதுகாப்பு தாக்க மதிப்பீடுகளை PDPA-இன் பிரிவு 24-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் மேற்கொள்ளுதல் போன்ற கடப்பாடுகளை ஒவ்வொரு நிறுவனமும் நிறைவேற்ற வேண்டும். குறிப்பிடப்பட்ட செய்முறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான தரவுப் பாதுகாப்பு தாக்க மதிப்பீட்டை மேற்கொள்ளும் படிவம் மற்றும் முறைமை தொடர்பான வரைவு விதிமுறை, DPA-இன் இணையத்தளத்தில் உள்ளது. தனிப்பட்ட தரவு மீறுகை அறிவிப்புகள் தொடர்பான வரைவு விதிகளும் DPA-இன் இணையத்தளத்தில் உள்ளன.

4.5 ஒரு கட்டுப்பாட்டாளரின் சார்பாக தனிப்பட்ட தரவுகளைச் செய்முறைப்படுத்துவதற்காக, ஒரு கட்டுப்பாட்டாளரால் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணியமர்த்தப்படும் மூன்றாம் தரப்பினர், PDPA-இன் கீழ் “செய்முறைப்படுத்துநர்” எனக் கருதப்படுவர். எதிர்காலத்தில், பொதுத்துறை நிறுவனங்கள், கட்டுப்பாட்டாளர் PDPA-இன் கீழான தமது கடப்பாடுகளுக்கு இணங்குவதற்கு உதவக்கூடிய தொழில்நுட்ப மற்றும் நிறுவன ரீதியான திறன்களைக் கொண்ட “செய்முறைப்படுத்துநர்களை” மட்டுமே தெரிவு செய்ய வேண்டும்.

4.6 தனிப்பட்ட தரவுகளைச் செய்முறைப்படுத்துவதற்கான எல்லைக்கப்பாலான தரவோட்டங்கள் தொடர்பில், குறிப்பாக கிளவுட் சேவைகளைப் பயன்படுத்துவதில், முன்னர் சில வரையறைகள் காணப்பட்ட போதிலும், 2025 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க PDPA திருத்தச் சட்டம், “கட்டுப்பாட்டாளர்” ஒருவர் எல்லைக்கப்பாலான தரவோட்டங்களில் ஈடுபடுவதற்கான விருப்புரிமையை வழங்குகிறது.
இந்தத் திருத்தத்தின் விளைவாக, டிஜிட்டல் மாற்றம் துரிதப்படுத்தப்படுவதுடன், பொது அதிகாரசபைகளும் தனியார் துறையும் செலவுத் திறன்மிக்கதும் விரிவாக்கக்கூடியதுமான தரவு சேமிப்பு மற்றும் செய்முறைப்படுத்தலுக்காக உலகளாவிய கிளவுட் உட்கட்டமைப்பைப் பயன்படுத்துவதற்கான சமமான வாய்ப்பைப் பெற முடியும்.மேலும், இந்தத் திருத்தச் சட்டம், எல்லைக்கப்பாலான தரவோட்டங்களில் ஈடுபடும் அனைத்து கட்டுப்பாட்டாளர்களும் செய்முறைப்படுத்துநர்களும், பிரிவு 26(2)-ன் கீழ் பிணைப்புடையதும் அமுலாக்கக்கூடியதுமான சட்ட ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. அதிகாரசபையினால் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள ஒரு வரைவு வழிகாட்டலானது, ஒப்பந்த விதிகள், நடத்தை விதிமுறைகள், சான்றிதழ்கள், தரவுப் பரிமாற்றத் தாக்க மதிப்பீடுகள் போன்ற பல சட்ட ஆவணங்களை அங்கீகரிக்கிறது. இந்தச் சட்ட ஆவணங்கள், தரவுகள் வெளிநாடுகளுக்கு பரிமாற்றம் செய்யப்படும் போது, தரவுடன் தொடர்புபட்டவர்களின் தனிப்பட்ட தரவுகளுக்கு சமமான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், மூன்றாம் நாடுகளில் உள்ள தரவுகளைப் பெறுபவர்கள், தரவுடன் தொடர்புபட்டவர்களுக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளையும் PDPA-இன் கீழ் கிடைக்கக்கூடிய நிவாரணங்களையும் உறுதிப்படுத்துவதற்கான பிணைப்புடையதும் அமுலாக்கக்கூடியதுமான உறுதிப்பாட்டை வழங்குவதை உறுதிப்படுத்துகின்றன.

4.7 PDPA-இன் ஏற்பாடுகளுக்கு முறையாக இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்த, துறைசார் ஒழுங்குபடுத்துநர்களையும் அமைச்சுகளையும் இயன்றளவு முன்கூட்டியே ஈடுபடுத்துவதன் முக்கியத்துவத்தை DPA உணர்ந்துள்ளது. PDPA-ஆல் அனுமதிக்கப்படும் வரையில், தனிப்பட்ட தரவுகளைச் சேகரித்தல் மற்றும் செய்முறைப்படுத்தலில் ஈடுபட்டுள்ள நிதி மற்றும் வங்கித்துறை, காப்புறுதி, சுகாதாரம், தொலைத்தொடர்பு, சிவில் பதிவு மற்றும் சுற்றுலாத்துறை போன்ற முக்கிய துறைகள்/வட்டாரங்களின் பிரதிநிதிகளுடன், துறைசார் நடைமுறைப்படுத்தல் தொடர்பான அம்சங்கள் குறித்து வழக்கமான கலந்துரையாடலைப் பேண DPA எதிர்பார்க்கிறது. இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஆயத்தநிலையை மேம்படுத்துவதற்காக, DPA-ஆல் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4.8 எதிர்வரும் காலத்தில் விழிப்புணர்வு மற்றும் உயர்நிலைச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான மேலதிக தகவல்கள் வழங்கப்படும். பொதுத்துறைக்காக, திணைக்களத் தலைவர்கள், சட்ட அலுவலர்கள், தரவுப் பாதுகாப்பு அலுவலர்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்குப் பொறுப்பான அலுவலர்கள் மற்றும் மனித வள முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான அலுவலர்கள் ஆகியோரை உள்ளடக்கி, பல விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வசதியளிக்க இந்த அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

4.9 தயவுசெய்து தங்களது மேற்பார்வையின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களுக்கும், PDPA-இன் ஏற்பாடுகளுக்கு இணங்குவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்க தொடர்புடைய பணிப்புரைகள்/அறிவுறுத்தல்களை வெளியிடுமாறு அறிவிக்கவும். அத்தகைய நடவடிக்கைகளில் உள்ளடங்கக்கூடிய விடயங்களுக்கான ஓர் எடுத்துக்காட்டு, இந்தச் சுற்றறிக்கையின் இணைப்பு 1-இல் வழங்கப்பட்டுள்ளது.

4.10 அனைத்து முக்கியமான தகவல்களும் உரிய சட்ட ஆவணங்களும் தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (URL: https://dpa.gov.lk/) வெளியிடப்படும். மேலும், info@dpa.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் DPA-ஐ தொடர்புகொள்ளலாம்.

4.11 இந்தச் சுற்றறிக்கை, 2024 செப்டெம்பர் 13 ஆம் திகதியிட்ட தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சுற்றறிக்கை இல. 01/2024-ஐ மாற்றி, வெளியிடப்படும் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

(Sgd./-)
**ரஜீவ பண்டாரநாயக்க**
**தலைவர்**
**தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை**

<u>பிரதி</u>

1. சனாதிபதியின் செயலாளர் — பணிவான கவனத்துக்கும் உரிய நடவடிக்கைக்காகவும்
2. பிரதமரின் செயலாளர் —
3. அமைச்சரவைச் செயலாளர் —
4. பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் —

**இணைப்பு 1 – தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்துடன் (PDPA) இணங்குதல்: ஆரம்ப நடவடிக்கைகள்**

**PDPA உடன் இணங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள்**

**(1) விழிப்புணர்வு:**
PDPA-இன் ஏற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணக்கப்பாட்டுத் தேவைகள் குறித்து அனைத்து பணியாளர்களினதும் விழிப்புணர்வை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

**(2) நிர்வாகக் கட்டமைப்பு:**
PDPA-இணக்கத்தை மேற்பார்வையிடுவதற்காக, தரவுப் பாதுகாப்பு அலுவலர் (DPO), தனியுரிமை சாம்பியன்கள் மற்றும்/அல்லது ஒரு உள்நிலை வழிநடத்தல் குழுவை நியமித்து, ஒரு நிர்வாகக் கட்டமைப்பை நிறுவவும்.

**(3) தனிப்பட்ட தரவு கணக்காய்வு:**
உங்களிடமுள்ள தனிப்பட்ட தரவுகள் என்ன, அவை எங்கிருந்து பெறப்பட்டன, அவை யாருடன் பகிரப்படுகின்றன, அவை ஏன் உங்களிடம் உள்ளன, அவற்றுடன் தொடர்புடைய செயன்முறைகள் ஆகியவற்றை ஆவணப்படுத்தவும்.

**(4) இடைவெளி மதிப்பீடு:**
உங்களின் தற்போதைய செய்முறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கும் PDPA-இன் கீழ் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கும் இடையிலான இடைவெளிகளைக் கண்டறியவும். அத்துடன், அந்த இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கான தீர்வுத் திட்டத்தையும் வடிவமைக்கவும்.

**(5) கொள்கை நடைமுறைப்படுத்தல்:**
நிறுவனம் சட்டத்துடன் இணங்கி ஒழுகுவதற்கு பொருத்தமான தரவுப் பாதுகாப்புக் கொள்கைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தவும் (உ.தா.: தரவுடன் தொடர்புபட்டவர்களின் உரிமைகளுக்குப் பதிலளித்தல், தரவுத் தக்கவைப்பு, தனியுரிமை அறிவித்தல்கள், தரவுடன் தொடர்புபட்டவர்களின் சம்மதத்தை முகாமை செய்தல், பயிற்சிகள் போன்றவை).

**(6) பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி :**
நிறுவனத்தின் பணியாளர்கள் PDPA-இலிருந்து எழும் இணக்கப்பாட்டுத் தேவைகளைப் புரிந்துகொண்டு அவற்றுக்கு இணங்குவதை உறுதிப்படுத்துவதுடன், தேவையான தொழில்நுட்பத் திறன்களையும் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்யவும்.